# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.I, Mettur

## Case No : C.C.288/2020

**Prosecution witness : அ.சா.2 Date : 22.05.2024**

| | |
|---|---|
| **Name: சுமதி** | **Taluk : குமாரபாளையம்** |
| **Husband Name : முருகன்** | **Calling : –** |
| **Village : குமாரபாளையம்** | **Age : 43** |

**( A1 and A3 present. Other all accused absent. Filed petition and allowed.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் குமாரபாளையத்தில் குடியிருக்கிறேன். நான் வீட்டில்தான் உள்ளேன். அ.சா.1 என்னுடைய மகள் ஆவார். என்னுடைய மகள் அ.சா.1 சம்பவகாலத்தில் திருச்செங்கோட்டிலுள்ள விவேகானந்தா கல்லூரியில் படித்து வந்தார். ஆஜர் எதிரி கார்த்தி என்னுடைய உறவினர் ஆவார். கார்த்திக்கும், என்னுடைய மகள் இருவரும் காதலித்து வந்தார்கள். எதிரி கார்த்தி என்னுடைய வீட்டிற்கு வருவார். ஒருநாள் என்னுடைய மகள் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டார். மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். அங்கு எனது மகள் கர்ப்பமாக இருப்பதாக சொன்னார்கள். நான் என் மகளிடம் விசாரித்தபோது நானும், எதிரி கார்த்திக்கும் நெருங்கி பழகிவந்ததாகவும், தன்னை திருமணம் செய்துக்கொள்வதாக சொல்லி உடலுறவு கொண்டதாகவும், அதனால் நான் கர்ப்பமாகி விட்டேன் என்றுசொல்லி என்னிடம் அழுதார். நாங்கள் எதிரிகள் குடும்பத்தாரிடம் சென்று சொன்னதற்கு தன்னுடைய மகன் அதற்கு காரணம் இல்லையென்றும், பெரியவர்களை கூப்பிட்டு பேசியபோது அதற்கும் அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. அதனால் திருச்செங்கோடு

காவல் நிலையத்தில் எதிரிகள் மீது புகார் கொடுத்தோம். எதிரி மற்றும் குடும்பத்தினரை அழைத்து போலீசார் விசாரணை செய்தனர். அதில் எதிரி கார்த்தி அவருடைய தவறை ஒத்துக்கொண்டார். அன்றைய தினம் இரவு 10.00 மணியளவில் திருச்செங்கோட்டில் உள்ள விநாயகர் கோவிலில் மாலை மாற்றி திருமணம் செய்துவைத்தோம். எனது மகளை கார்த்தி அவருடைய ஊரான மூலப்பாறைக்கு அழைத்து சென்று குடும்பம் நடத்தினார். எதிரி கார்த்தி மற்றும் அவரது அப்பா, அம்மா ஆகியோர் காவல் நிலையத்திற்கு புகார்கொடுக்க சென்றதால் என் மகளை கொடுமைப்படுத்தியதாகவும், சரியாக சாப்பாடு கொடுக்காமல் இருப்பதாகவும் எனது மகள் என்னிடம் சொன்னார். எதிரி கார்த்திக் என் மகளிடம் சண்டைப்போட்டு கொண்டு வீட்டை விட்டு சென்றதாகவும், அதன் பிறகு குமாரபாளையத்தை சேர்ந்த எனது உறவினர்களான சுப்ரமணி, லதா அவர்களின் மகள் மைதிலியை இரண்டாவது திருமணம் செய்துக்கொண்டதாக என்னுடைய மகள் என்னிடம் தகவல் சொன்னார். எதிரி கார்த்தி இரண்டாவது திருமணம் செய்துக்கொண்டது குறித்து அவரது பெற்றோர்களே எனது மகளிடம் சொன்னதாக என்னிடம் என் மகள் சொன்னார். எனது மகளுக்கு கவின்நந்தன் என்ற 6 வயது ஆண்குழந்தை உள்ளது. இரண்டாவது திருமணம் செய்துக்கொண்ட மைதிலி என்பவருக்கு ஒரு ஆண்குழந்தை உள்ளது. இதுசம்மந்தமாக கொளத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அங்கிருந்து மேட்டுர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகாரினை கொடுத்து அவர்கள் வழக்கு பதிவுசெய்தார்கள். எனது மகள் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிரிகள் சுப்ரமணி, லதா, சக்திவேல், மைதிலி, கார்த்தி, ராணி, மற்றும் இருவர் மீது புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் மகளுக்கு பெரியோர்கள் பார்த்து திருமணம் நடக்கவில்லை என்றால் சரிதான். என் மகளுக்கு காவல் நிலையத்தில்தான் திருமணம் நடந்தது என்றால் இல்லை. திருச்செங்கோட்டிலுள்ள ஒரு விநாயகர் கோவிலில் திருமணம் நடந்தது. எந்த தேதியில் திருமணம் நடந்தது என்றால் தெரியாது. 6 வருடம் ஆகிவிட்டது. எவ்வளவு நாட்கள் குடும்பம் நடத்தினார்கள் என்றால் 1– 1 1/2 மாதம் இருக்கும். அதன்பின்னிட்டு என் வீட்டிற்கு என் மகள் வந்துவிட்டார் என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் புகார் அளித்துவிட்டு என் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன். காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் அனைவரும் சேர்ந்து தான் கொடுத்தோம். எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் கொளத்தூர் காவல் நிலையத்தில் கொடுத்தோம். அவர்கள் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தார்கள். புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகார் கொடுத்த தேதி தெரியுமா என்றால் தெரியாது. அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எந்த தேதியில் புகார் கொடுக்கபட்டது என்றால் தெரியாது. என் மகள் தனிகுடுத்தனம் போகவேண்டும் என்று சொல்லித்தான் ஒரு பொய்யான புகாரினை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என் மகளை அடித்து கொடுமைப்படுத்தியதற்காக மருத்தவ சான்றிதழை போலீசாரிடமோ, நீதிமன்றத்திலோ தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. என் மருமகன் எதிரி கார்த்திக் இன்னொரு திருமணம் எங்கு செய்தார் என்றால் தெரியாது. மற்ற எதிரிகளை எவ்வாறு வழக்கில் சேர்த்தோம் என்றால் எல்லோரும் 1 ம் எதிரியின் கூட்டாளிகள்தான். என் மகள் சொல்லித்தான் 1 ம் எதிரிக்கு இரண்டாவது திருமணம் நடந்ததும், என் மகளை

கொடுமைப்படுத்திய விவரம் தெரியும் என்றால் சரிதான். எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். 1 ம் எதிரிக்கும், அ.சா.1 ற்கும் காவல் நிலையத்தில்தான் திருமணம் நடந்தது என்றும், 1 மாதம் கூட சேர்ந்து வாழாமல் தனிக்குடுத்தனம் செல்வதற்காக பிரச்சனை செய்து, இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது**

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**